அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்

மலர் : 5 இதழ் : 7 ஜூலை – 2014 (தனிச்சுற்றுக்கு மட்டும்)
thirukkalyanamatha.com



## இருதய அன்பில் இணைவோம்

# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230

kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்

அருட்திரு. R. ஜோசப் ரவிபாலன்

ஆலோசகர் குழு

அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230

தொடர்பு முகவரி
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| அன்னை மரியாவும் இயேசுவின் சகோதரர்களும் | 2 |
| முதல் சனி வழிபாடு | 7 |
| அருளும் அழகும் நிறைந்த அன்னாள் | 14 |
| விசுவாசிக்கிற கன்னிகையே | 15 |
| புனித பொனவெந்தூர் | 18 |
| உலகத் திருச்சபை செய்திகள் | 24 |
| புனித லெயோலா இன்னாசியார் | 25 |
| பங்குச் செய்திகள் | 26 |
| டேவிட் பென்குரியன் | 29 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 30 |
| திருவிவிலியம் நமது செல்வம் | 32 |

வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



**இயேசுவில் அன்புக்குரியவர்களே! திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே!**

திருமண வரம் நல்கும் திருக்கல்யாணத்தாயின் பெயரும் புகழும் எவ்விதத் தடையுமின்றி உயர்ந்து கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அன்புத் தாயின் அன்பையும், மானிடராகிய நமக்காக எப்பொழுதும் இறைவனிடம் பரிந்துரைக்கும் அவரது பண்பையும், ஏழைகளுக்கு உதவிக் கரம் நீட்டும் அவரது இரக்கத்தையும் நாம் நன்கு அறிவோம்.

பலவிதமான ஏக்கங்கள் எதிர்பார்ப்புகளுடன் திருக்கல்யாணத் தாயை அணுகும் யாரும் தோல்வி அடைந்ததாகவோ, ஏமாற்றம் கொண்டதாகவோ வரலாறு கிடையாது. ஒவ்வொரு மாதமும் நம் அற்புத அன்னைக்கு எழுதப்படும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள், அவர் தொடர்ந்து ஆற்றிக்கொண்டு வரும் புதுமைகளுக்கும், அற்புதங்களுக்கும் சாட்சிகளாய்த் திகழுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. மாதத்தின் முதல் சனிக்கிழமை மட்டுமல்லாது, பிற நாட்களிலும் நம் திருக்கல்யாணத் தாயிடம் தங்களின் அன்பையும், பற்றினையும், பக்தியையும் காட்டுவதற்காக வரக்கூடிய திருப்பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

திருக்கல்யாணத் தாயின் பரிந்துரையின் காரணமாக கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றியைக் காணிக்கையாக்குவது நல்ல பண்பாகும். நமது வேண்டுதல்கள் நிறைவேறுகிறபோது, நம் நன்றியை வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ எடுத்துரைக்கும் நல்ல பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளுதல் நல்லது. அதனால் நம் அன்னையின் புகழ் இன்னும் அதிகமாய்ப் பரவும். நமது நன்றியின் சாட்சியங்களே திருக்கல்யாணத்தாயின் திருத்தலத்திற்கு மிகச் சிறந்த விளம்பரம் என்று எளிதில் கூறிவிடமுடியும்.

நம் திருக்கல்யாணத் தாயிடம் நாம் கொண்டுள்ள பக்தியையும், அன்பையும் வெளிப்படுத்தும் விதத்தில், முதல் சனி நீங்கலாக மாதத்தின் பிற சனிக்கிழமைகளில் மாலை 6.30மணிக்கு நமது தேரோடும் வீதியில் அன்னயின் திருவுருவம் தாங்கிய சிறிய சப்பரத்தை பவனியாக எடுத்துச் சென்று, எரியும் மெழுகுத்திரிகளைக் கைகளில் ஏந்திக்கொண்டு, தியானச் சிந்தனையும், அன்னையின் பாடல்களும் கலந்த செபமாலையைச் செபித்து, நவநாள் திருப்பலி நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வருகிற ஆகஸ்டு முதல் சனிக்கிழமையிலிருந்து, காலை 10 மணி முதல் 11 மணிவரை மலையாளத்திலும், நடுப்பகல் 12 மணி முதல் பிற்பகல் 1.20 முடிய தமிழிலும் திருப்பலிகள் நிறைவேற்றிட முடிவு செய்யப்பட்டுள்ளது. காலை 11 மணி முதல் நடுப்பகல் 12 மணி வரை அன்னையின் திருவுருவம் தாங்கிய சிறிய சப்பரப் பவனியுடன் செபமாலை செபித்து, நம் திருக்கல்யாணத் தாய்க்கு பக்தி வணக்கம் செலுத்தவிருக்கிறோம். முதல் சனி திருநிகழ்வுகள் காலை 9 மணிக்கு குணமளிக்கும் ஆராதனையுடன் தொடங்கும்.

ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களை மனதில் கொண்டு, முதல் சனிக்கிழமை திருநிகழ்வுகளிலும், மாதத்தில் பிற சனிக்கிழமைகளில் மாலையில் நடைபெறும் திருநிகழ்வுகளிலும் கலந்துகொண்டு, இறைவனின் ஆசீரைப் பெற்று மகிழுங்கள். உங்களுக்கு அறிமுகமானவர்களிடத்தில் நம் திருத்தல மகிமையை எடுத்துரைக்க மறவாதீர்கள்.

– அருட்திரு. **R.ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை

# அன்னை மரியாவும் இயேசுவின் சகோதரர்களும்

அன்னை மரியாவின் சிறப்பினை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்கள், அவரைக்குறித்து சில தவறான கருத்துக்களை முன்வைத்துப் பேசி, கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாகிய நம்மையும், கிறிஸ்தவத்தின் பிற சபைகளைச் சார்ந்தவர்களையும், பிற மதத்தினரையும் குழப்புவதை நாம் அறிவோம். அத்தகையப் பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடத்தில் விவாதம் செய்வது பல சமயங்களில் நமக்கு மிகக் கடினமான செயலாகத்தான் தென்படுகிறது. புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள சில கருத்துக்கள் மேலெழுந்தவாரியாகப் பார்க்கப்படும்போது, அவை நம்முடைய நம்பிக்கைக்கும், எண்ணத்திற்கும் எதிரானவையாகத்தான் தோன்றுகின்றன. ஆகவே உணர்வுப்பூர்வமாகவோ அல்லது நாம் அன்னை மரியா மீது வைத்துள்ள அளவுகடந்த பக்தியின் அடிப்படையிலோ அன்னையைப் பற்றி எழுப்பப்படுகின்ற சந்தேகங்களுக்கும், யூகங்களுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருப்பது மிகவும் அர்த்தமற்ற ஒரு செயலாகும். அன்னை மரியா பற்றி எழுப்பப்படுகின்ற சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் திருவிவிலியம் அல்லது நம் கத்தோலிக்கத் திருச்சபையின் பாரம்பரியச் சிந்தனைகள் மற்றும் படிப்பினைகள் ஆகியவற்றின் துணைகொண்டு யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் நம்மால் பதில் தரமுடியும். அன்னை மரியாவைப் பற்றிப் பொதுவாக எழுப்பக்கூடிய சந்தேகங்களுள் ஒன்று இதுதான். இயேசு மரியாவின் தலைமகன் என்பதில் சந்தேகமில்லை. (லூக். 2:22-23) இயேசுவைப் பெற்றெடுத்த பிறகு மரியா இன்னும் சில புதல்வர்களைப் பெற்றெடுத்தார். அப்படியானால் மரியாவை எவ்வாறு நாம் கன்னி என்றழைக்க முடியும்?



## நற்செய்தி நூல்களில் அடங்கியுள்ள குறிப்புகள் :

புதிய ஏற்பாட்டில் சில பகுதிகளில் அடங்கியுள்ள உண்மைகளைப் பார்க்கும்போது அன்னையின் தீவிர பக்தர்களுக்கும் இந்தப் பிரச்சினைக் குறித்து சில சந்தேகங்கள் எழுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இயேசுவின் பிறப்பு மனித உறவினால் வருவதல்ல மாறாக அது இறை ஆவியின் ஆற்றலினால் உருவானது. கன்னியாகிய மரியா மீது தூய ஆவியின் வல்லமை இறங்கி வந்து, அதனால் மரியா கருவுற்று இயேசுவைப் பெற்றெடுத்தார். மனித உறவின் அவசியமின்றி, இறை ஆவியின் வல்லமையினால் கருவுற்ற மரியா


எப்பொழுதும் கன்னி என்றே அழைக்கப்படுகிறார். இந்த உண்மையை உறுதியுடன் அறிவிக்க விரும்பிய மத்தேயு தம் நற்செய்தி நூலில் மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும் வரை யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை. (மத் 1:25) என்று பதிவு செய்துள்ளார். இந்த வாக்கியத்தைப் படிக்கும் கத்தோலிக்கரல்லாதவர்கள், ஏன் கத்தோலிக்கர்களுள் சிலரும் கூட மரியாயின் கன்னித்தன்மையைக் குறித்துப் பலவிதமான சந்தேகங்களை எழுப்பி, அவர் என்றும் கன்னி என்றழைக் கப்படமுடியாது என்கின்றனர். அதாவது, இயேசுவின் பிறப்புக்குப்பின் அன்னை மரியா யோசேப்புடன் கூடி வாழ்ந்து இன்னும் சில குழந்தைகளைப் பெற்றிருக்கலாம் என்பது இவர்களின் வாதம். மேலும் மரியா தம் தலைமகனைப் பெற்றெடுத்தார்(லூக் 2:7) என்று லூக்கா குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கும்போது தலைமகனாகிய (மூத்த மகனாகிய) இயேசுவைப் பெற்றெடுத்தபின் சில புதல்வர்களை அன்னை மரியா பெற்றெடுத்திருக்கலாம் என்று யூகித்துக்கொண்டு வாதிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

இத்தகைய வாதத்திற்கு உதவும் வகையில் சில இடங்களில் இயேசுவின் சகோதரர்கள் குறித்து குறிப்புக்கள் இருக்கின்றன (மத் 12:48-50, மாற் 3:31,6;3 லூக் 8:19-20 இயேசுவுக்கு சகோதரிகளும் இருந்தனர் என்று மத்தேயும், மாற்கும் குறிப்பிட்டுள்ளனர். (மத் 13:56, மாற் 6:3)இந்த இரண்டு நற்செய்தியாளர்களும் இயேசுவின் சகோதரர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளனர். மத்தேயுவின் குறிப்பின்படி, அவர்களின் பெயர்கள்: யாக்கோபு, யோசேப்பு, சீமோன், யூதா, (மத் 13:65) மாற்குவின் குறிப்பின்படி அவர்களின் பெயர்கள் யாக்கோபு, யோசேப்பு, யூதா, சீமோன் (மாற் 6:3) மத்தேயு குறிப்பிடுகிற யோசேப்பும், மாற்கு குறிப்பிடும் யோசேயும் ஒரே நபர்தான் என்று பொதுவாக நம்பப்படுகிறது. மேலும் இயேசுவின் சகோதரர்கள் என்று குறிப்பிட்டுள்ளவர்கள் இயேசுவைச் சந்திக்க வருகிற போதெல்லாம் மரியாவோடு வருவதைப் பார்க்கிறோம். (மத் 12:46-47, மாற் 3:31, லூக் 8:19-20) ஆகவே இவர்கள் மரியாவின் புதல்வர்கள் என்று யூகித்துக்கொள்ள வாய்ப்புள்ளது.


## சகோதரர் என்கிற வார்த்தை :

'ஆஹ்' என்கிற எபிரேய வார்த்தை சகோதரர் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இந்த வார்த்தைக்கு (ஆஹ்) இணையான கிரேக்க வார்த்தை அடெல்ஃபோஸ் ஆகும். நற்செய்தி நூல்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளதை






நாம் அறிவோம். இயேசு தேர்ந்துகொண்ட பன்னிரு திருத்தூதர்களும் யூதர்கள் தான். லேவி என்றழைக்கப்பட்ட மத்தேயு இயேசுவின் திருத்தூதர் என்பதனால் (மாற் 2:1317, லூக் 5:27-32) அவரும் ஒரு யூதர் என்பது தெளிவு. மேலும் அவர் யூத மரபுகளையும், திருச்சட்டங்களையும் நுணுக்கமாக அறிந்திருந்தார் என்பது விவிலிய நிபுணர்களின் கருத்து. மாற்கு இயேசுவின் திருத்தூதராக இருந்திருக்கவில்லையெனினும், அவர் இயேசுவைப் பின்பற்றிய சீடர்களுள் ஒருவர் என்று பொதுவாக எண்ணப்படுகிறது. பர்னபா மற்றும் பவுல் ஆகியோருடன் முதல் தூதுரைப் பயணத்தில் சில நாட்கள் ஈடுபட்டபின் விலகிச்சென்ற மாற்கு (தி.ப 13:13) பிற்காலத்தில் பேதுருவின் சீடராக விளங்கினார்(1பேது 5:13) அவரது தாயார் எருசலேமைச் சேர்ந்தவர் (தி.ப 12:12) என்பதையும், அவர் சைப்பிரசுத் தீவைச் சேர்ந்த லேவியராகிய பர்னபா என்கிற யோசேப்பு (தி.ப 4:36) என்பவரின் நெருங்கிய உறவினர் (கொலோ 4:10) என்பதை வைத்துப் பார்க்கிற போது, அவர் ஒரு யூதர்தான் என்று நாம் உறுதியுடன் சொல்லமுடியும். நற்செய்தி நூல்களில் முதலாவது எழுதப்பட்டது மாற்கு எழுதிய நற்செய்திதான். மத்தேயுவும், லூக்காவும் மாற்கு நற்செய்தியிலிருந்து பெரும்பகுதியை எடுத்து எழுதியுள்ளனர். ஏதாவது ஒரு நிகழ்வோ அல்லது செய்தியோ ஒத்தமைவு நற்செய்தி நூல்கள் மூன்றிலும் (மாற்கு, மத்தேயு, லூக்கா) குறிப்பிடப்பட்டிருந்தால், அதை மாற்குதான் முதலில் எழுதினார் என்று நாம் எளிதில் சொல்லிவிடலாம். மாற்குவின் தாய்மொழி எபிரேய மொழியாக இருந்தபடியினால், அவர் கிரேக்க மொழியில் இயேசுவின் நற்செய்தி நூலை எழுதியிருந்தாலும் அவரது எழுத்துநடை மற்றும் அவர் உணர்த்தும் பொருள் யாவும் எபிரேயச் சாயலைத்தான் தாங்கிக் கொண்டிருக்கும்.





எபிரேய மொழி பெரிய அளவில் வளர்ச்சியடையாத மொழி. மிகவும் சாதாரண இலக்கண அமைப்பைக் கொண்டு விளங்கும் இம்மொழியில் வார்த்தைகளின் எண்ணிக்கை மிகக் குறைவுதான். ஓர் எபிரேய வார்த்தை பல அர்த்தங்களைக் கொண்டதாக இருக்கும். யூத இனத்தைச் சேர்ந்த மாற்கு, அடெல்ஃபோஸ் என்கிற கிரேக்க வார்த்தையை 'ஆஹ்' என்கிற எபிரேய வார்த்தை தரும் அர்த்தத்தின் அடிப்படையில் கையாளும்போது, உண்மையில் அதன் அர்த்தம் வித்தியாசப்படும். அடெல்ஃபோஸ் என்கிற கிரேக்க வார்த்தை கூடப்பிறந்த சகோதரன் என்றும், மைத்துனர் என்றும், சொந்த இனத்தான் (உரோ 9:3) என்றும் அடுத்திருப்பவர் (மத் 5:22-24) என்றும், ஒன்றுவிட்ட சகோதரன் (மாற் 6:17-18) என்றும் நெருங்கிய உறவினர் (தொ.நூ 24:48, 29:12)என்றும் பலவிதங்களில் பொருள்கொள்ளப்படுகிறது. நற்செய்தியாளர் லூக்கா அடிப்படையில் கிரேக்கர். கிரேக்க மொழியில் பல விதமான வார்த்தைகள் கையாளப்படுகின்றன. எபிரேய மொழியைப் போன்றில்லாமல், கிரேக்க மொழியில் ஒரு பொருளை உணர்த்த, பல வார்த்தைகளைப் பயன்படுத்த முடியும். நற்செய்தியாளராகிய லூக்கா, மாற்கு நற்செய்தியிலிருந்து பெரும்பகுதியை எடுத்து எழுதியிருக்கிறார். ஆகவே மாற்கு பயன்படுத்தும் வார்த்தைகளை



அதே அர்த்தத்தில் லூக்காவும பயன்படுத்தியுள்ளார். அடெல்ஃபோஸ் என்கிற வார்த்தையை கிரேக்கரான லூக்காவும் கூட எபிரேயச் சாயலில் எடுத்துக்கொண்டு தான் எழுதியிருக்கிறார். ஆகவே இயேசுவின் சகோதரர் என்றால் அதைப் பல விதங்களில் புரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. மேலும் கி.பி. 145ம் ஆண்டுக்கும் கி.பி 300ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாய்க் கருதப்படும் யாக்கோபுவின் முதல் நற்செய்தி அல்லது யாக்கோபுவின் புத்தகம் என்கிற நூலில்(9:2) யோசேப்பு அன்னை மரியாவை மணப்பதற்கு முன், ஏற்கனவே அவர் செய்திருந்த முதல் திருமணத்தின் மூலம் அவருக்குக் குழந்தைகள் இருந்தனர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்பின் புதல்வியர் இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள் ஆவர். அப்படியானால் அவர்கள் மரியா பெற்றப் பிள்ளைகள் அல்ல என்பது தெளிவாகிறது.

## சிலுவையின் ஒளி தரும் உண்மை

இயேசு சிலுவையில் தொங்கியபோது அவருக்கருகில் சில பெண்கள் நின்றுகொண்டிருந்தனர் என்று நற்செய்தியாளர்களாகிய மத்தேயு, மாற்கு யோவான் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். மத்தேயு நற்செய்தியில் மகதால மரியா, யாக்கோபு, யோசேப்பு, ஆகியோரின் தாய் மரியா மற்றும் செபதேயுவின் மக்களுடைய தாய் ஆகியோர் இருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (மத் 27:56) மகதலா மரியா, சின்ன யாக்கோபு, யோசே, ஆகியோரின் தாயாகிய மரியா மற்றும் சலோமி ஆகியோர் இருந்தனர் என்று மாற்கு நற்செய்தி கூறுகின்றது. (மாற்15:40). இயேசுவின் தாய், அவரது சகோதரி குளோப்பாவின் மனைவி மரியா மற்றும் மகதலா மரியா சிலுவைக்கருகில் இருந்தனர் என்று யோவானின் குறிப்பு கூறுகிறது. (யோவா 19:25).



(பொது மொழிபெயர்ப்பு திருவிவிலியத்தில் தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும் (யோவா 19:25) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை வாசிக்கும்போது தாயின் சகோதரியும், குளோப்பாவின் மனைவி மரியாவும் ஒரே பெண்தான் என்று தவறாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கிரேக்க மூல ஏட்டில் தாயின் சகோதரி வேறு குளோப்பாவின் மனைவி மரியா வேறு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது)

மகதலா மரியாவின் பெயரை மூன்று நற்செய்தியாளர்களும் குறிப்பிடுகின்றக் காரணத்தால் அவரது பெயரை ஒதுக்கிவிட்டு, மீதமுள்ளவர்கள் யாவர் என்று அறிய முற்படலாம். மத்தேயு குறிப்பிடும் யாக்கோபு, யோசேப்பு ஆகியோரின் தாய் மரியாவும் இயேசுவின் தாய் மரியாவும் ஒரே நபர் என்றால், இயேசுவுக்கு நிச்சயமாக கூடப்பிறந்த சகோதரர்கள் இருந்தனர் என்று ஏற்றுக்கொண்டு விடலாம். மத்தேயு குறிப்பிடும் யோசேப்பும், மாற்கு குறிப்பிடும் யோசேயும் ஒரே நபராகத்தான் இருக்கவேண்டும். மாற்கு குறிப்பிடும் சின்ன யாக்கோபு செபதேயுவின் மகனும், யோவானின் சகோதரருமான யாக்கோபுவாகவோ அல்லது இயேசுவின் வேறொரு திருத்தூதரான அல்பேயுவின் மகனான யாக்கோபுவாகவோ ( மத் 10:3, மாற் 3:18)இருக்க வாய்ப்பில்லை. (1கொரி 15:57ல் பன்னிரு திருத்தூதர்கள் தவிர்த்து வேறொரு யாக்கோபுவை பவுல்

சுட்டிக்காட்டுகின்றார். இந்த யாக்கோபு மத்தேயு மற்றும் மாற்கு குறிப்பிடும்(மத் 13:55, மாற் 6:3) யாக்கோபுவாகத்தான் இருக்க வாய்ப்புள்ளது) இயேசுவின் தாய் மரியா மற்றும் மகதலா மரியா நீங்கலாக, குளோப்புவின் மனைவி என்று வேறொரு மரியாவை யோவான் குறிப்பிட்டுள்ளார். (சின்ன) யாக்கோபு மற்றும் யோசேப்பு) ஆகியோரின் தாய் மரியாவும், குளோப்பாவின் மனைவியும் ஒரே நபராக இருக்க அதிக வாய்ப்புள்ளது. மத்தேயு குறிப்பிடும் மூன்றாவது பெண் செபதேயுவின் மக்களின் தாய், மாற்கு குறிப்பிடும் மூன்றாவது பெண்ணின் பெயர் சலோமி. இந்த சலோமி செபதேயுவின் மனைவியும், யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாயாகவும் இருந்திருக்கவேண்டும். யோவானின் குறிப்பில் இயேசுவின் தாய் (மரியா) நீங்கலாக மீதமுள்ள மூன்றுபேரில் அடையாளம் காட்டப்படாமல் எஞ்சியிருப்பவர் இயேசுவின் தாயின் சகோதரி மட்டும்தான். அப்படியென்றால் செபதேயுவின் மனைவியும், யாக்கோபு மற்றும் யோவானின் தாயுமான சலோமிதான் இயேசுவின் தாய் மரியாவின் சகோதரி என்றாகிறது. யாக்கோபு, யோவன் ஆகியோர் இயேசுவின் நெருங்கிய உறவினரும், இளமைக்கால நண்பர்களுமாய் இருந்த காரணத்தினால், பேதுருவுடன் சேர்ந்து அவர்களை இயேசு தம் முதல் திருத்தூதர்களாகச் சேர்த்துக்கொண்டிருக்கலாம். இந்த உரிமையில்தான் யாக்கோபுவும், யோவானும் இயேசுவை அணுகி, தங்களுக்கு உயர் பதவியைக் கேட்டனர். (மத் 20:20-28, மாற் 10:35-45) என்று நம்மால் சொல்லமுடியும் பேதுருவுடன் சேர்ந்து யாக்கோபுவும் யோவானும் இயேசுவின் மூன்று முக்கிய திருத்தூதர்களாய் செயல்பட்டது. யோவான் இயேசுவால் அதிகமாக அன்பு செய்யப்பட்டது போன்ற உண்மைகள், செபதேயுவின் மக்களாகிய யாக்கோபு மற்றும் யோவான் இயேசுவின் நெருங்கிய உறவினர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. முடிவாக இயேசுவின் சகோதரர்கள் என்று வர்ணிக்கப்படும் (சின்ன) யாக்கோபு, யோசே(ப்பு), யூதா, சீமோன் ஆகியோர் இயேசுவின் தாய் மரியாவின் புதல்வர்கள் இல்லை என்று தெளிவாகிறது.

– அருட்திரு. **R.J.ரவி பாலன்**

## முதற்சனி – குணமளிக்கும் ஜெப வழிபாட்டில் கண்ணீருடன் கலந்து கொண்ட கூட்டத்தின் ஒரு பகுதி



(07.06.2014)




# நன்றிகள் பலகோடிகள்
# 07.06.2014 முதல்சனி
# உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| சந்தோஷ்குமார், கவரப்பேட்டை | 500.00 |
| சதிஷ்குமார், கவரப்பேட்டை | 500.00 |
| சுபாஷ்குமார், கவரப்பேட்டை | 500.00 |
| சர்மிளா மேரி, கவரப்பேட்டை | 500.00 |
| ஆல்பர்ட்., நாசரேத் | 200.00 |
| அந்தோணி பாஸ்கர், | 500.00 |
| மத்தியாஸ், நாகர்கோவில் | 500.00 |
| இன்னாசி அந்தோனிதுரை | 1000.00 |
| ஜாண்சன் அனிதா, கவரப்பேட்டை | 500.00 |
| ஜெனிப்பிரியா, சேரன்மகாதேவி | 70.00 |
| ஜேசுஇருதயம், வீரபாண்டியன்பட்டணம் | 6600.00 |
| சிலுவை அந்தோனி கனி, பொற்பை | 200.00 |
| மின்னல் டெய்லர், பொற்பை | 500.00 |
| ராஜ், பொற்பை | 200.00 |
| தீர்த்தூஸ், இராமன்புதூர் | 250.00 |
| அமலதாசன், பொற்பை | 200.00 |
| ரெஜினாள் மேரி, பொற்பை | 500.00 |
| ராஜேந்திரன், பொற்பை | 500.00 |
| ஜோஸ்லின், பொற்பை | 100.00 |
| ராஜேந்திரன், பொற்பை | 200.00 |
| ஜேசுதுரை, பொற்பை | 500.00 |
| லாரன்ஸ் மரியதங்கம், நாகர்கோவில் | 1000.00 |
| சூசைராஜ், ஊத்துமலை | 500.00 |
| சகாய ஹெலன், இராமன்புதூர் | 2000.00 |
| ஜெபஸ்டின் ரெனிஷா, மதுரை | 500.00 |
| அந்தோணி ஜெயராஜ், பொற்பை | 500.00 |
| அந்தோணி செல்வன், சாத்தான்குளம் | 1000.00 |
| எட்வர்ட் லாரன்ஸ் | 200.00 |
| மேரி லதா ராஜப்பா, ராஜாவூர் | 5000.00 |
| நிர்மலா, மிசல் | 300.00 |
| வின்ஸிலின் ஸிபோரா, பொற்பை | 2500.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1000.00 |
| அனு, மரியநாடு | 40.00 |
| குமாரதாஸ் ஜெஸிந்தா, வெர்னிகோடு | 1000.00 |
| பதுவா டிராவல்ஸ், மணப்பாடு | 200.00 |
| சேவியர், சாத்தான்குளம் | 100.00 |
| மேரி மோயிஸ், நாகர்கோயில் | 200.00 |

| | |
|---|---|
| டேவிட் ஜான் டிமேரிஸ், நாகர்கோவில் | 500.00 |
| ஜான், காரைக்குடி | 1000.00 |
| ரெக்ஸ், ஈரோடு | 500.00 |
| ஞானசேகர், பழையகாயல் | 500.00 |
| இம்மானுவேல் ஜஸ்டின் தாமஸ், பொற்பை | 500.00 |
| ஆலட் ஜோஸ் அமுதா, கண்டன்விளை | 2000.00 |
| விசுவாசம் மிக்கேல் அம்மாள், கோவில்பட்டி | 1000.00 |
| ஏசுவடியான், பொற்பை | 100.00 |
| சார்லின் அம்மாள் சின்னத்துரை, இணையம் | 1000.00 |
| அந்தோனிராஜ், பொற்பை | 500.00 |
| கிஷோர், தூத்துக்குடி | 1000.00 |
| சகாய பிலிப், பொழிக்கரை | 1000.00 |
| சூசன் சைனி ஹெர்லின், நாகர்கோவில் | 1000.00 |
| பவுல்ராஜ், சரல் | 800.00 |
| அனிஷ், உடன்குடி | 1000.00 |
| ஜோபன், புன்னக்காயல் | 500.00 |
| ஜெரின் ஸ்டோர், உடன்குடி | 500.00 |
| ஜெபஸ்டின் மெல்ஸிஸ், முத்துலாபுரம் | 500.00 |
| பிரதீப், முக்காணி | 100.00 |
| அமலதாஸ், மன்னார்புரம் | 400.00 |
| ஜோர்டன், ராஜாக்கமங்கலதுரை | 11000.00 |
| சேவியர், ராஜாக்கமங்கலதுரை | 1000.00 |
| நிஷாந்தினி, தூத்துக்குடி | 1000.00 |
| சேசு ராஜேந்திரன், பொற்பை | 200.00 |
| ரூபிஸ்டன், பெரியதாழை | 1000.00 |
| மகராஜன், நாசரேத் | 50.00 |
| மரிய அருள் தாசன், குருசடி | 500.00 |
| ரெஷ்லின் அனிதா, மதுரை | 100.00 |
| சுரேஷ் பாண்டியன், பொற்பை | 100.00 |
| மொத்தம் | **59910.00** |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| காமராஜ் டெய்சி ராணி, பொற்பை | 10000 சாப்பாடு பிளேட் |
| அன்னையின் அடிமை | பீடப்பூக்கள் |
| ஹாசன் பஸ் நன்கொடையாக | காய்கறி வாடகை |
| செல்வஜோதி மைக்கிள்ராஜ், வாலத்தூர் | அரிசி 100 கிலோ |
| பிலிப் நிக்கோலஸ் பிரமிளா | அரிசி 25 கிலோ |
| சூசைராஜ், ஊத்தமலை | தேங்காய் |
| பெயர்சொல்ல விரும்பாத நபர் | அரிசி 100 கிலோ |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 100 கிலோ |

| | |
|---|---|
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 100 கிலோ |
| ஜஸ்டின், சென்னை | அரிசி 100 கிலோ |
| ஜெரோம் குயின்டின், கவரப்பேட்டை | அரிசி 100 கிலோ |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50 கிலோ |
| சூசை மிக்கேல், கோவை | அரிசி 50 கிலோ |
| ஜெரால்டு விஜி, மும்பை | அரிசி 50 கிலோ |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி 50 கிலோ |
| பிரவீன், ராஜாக்கமங்கலதுரை | அரிசி 25 கிலோ |
| நவமணி, மணப்பாடு | தண்ணீர் மூடை 2 |
| கென்னடி, கொம்புத்துறை | தண்ணீர் மூடை 2 |
| சேசு அந்தோணிமரியபுஷ்பம், மிட்டாதார்குளம் | அரிசி 25 கிலோ |
| ராஜ், அழகப்பபுரம் | அரிசி25 கிலோ |
| கென்னடி கலா, | அரிசி 25 கிலோ |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் :

| | |
|---|---|
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| யோவான் சமையல் குழு | 13000.00 |
| சேசு ஜெயராஜ மற்றும் பணியாளர்கள் | 4300.00 |
| பேச்சியம்மாள் தூய்மைபணி | 2500.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை | 5664.00 |
| பாஸ்கர் மளிகை | 73920.00 |
| ஜெயக்குமார் டிராக்டர் நடை | 2000.00 |
| வின்செண்ட் உணவு விடுதி | 1178.00 |
| இம்மான் தண்ணீர் லோடு வண்டி வாடகை | 1900.00 |
| தேவ அமிர்தராணி செங்கல் 100 | 590.00 |
| ரூபஸ்குமார் கத்தரிக்காய் 255 கிலோ | 2630.00 |
| ரூபி ஸ்டோர் இருதயராஜ் அரிசி 25கிலோ | 900.00 |
| செபஸ்டின் லைட் கட்ட | 600.00 |
| ஜஸ்டின் சகாய ராஜா டீ கடை | 130.00 |
| மொத்தம் | **109712.00** |

| | | |
|---|---|---|
| வங்கியில் வட்டி மூலம் வரவு | - | 132.00 |
| கையில் | - | 399.00 |
| நன்கொடை மூலம் வரவு | - | 59910.00 |
| பங்குத் தந்தைமூலம் வரவு | - | 49700.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | - | 3000.00 |
| மொத்தம் | - | 113141.00 |
| செலவு | - | 109712.00 |
| இறுதி இருப்பு | - | 3429.00 |

| | | |
|---|---|---|
| வங்கியில் | - | 3132.00 |
| கையில் | - | 297.00 |
| இறுதி மொத்த இருப்பு | - | 3429.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.03.14 அன்று இருப்பு | 133527.00 |
| 01.04.14 முதல் 30.04.14 வரை விற்பனை | 124050.00 |
| மொத்தம் | 257597.00 |
| 01.04.14 முதல் 30.04.14 வரை செலவு | 131952.00 |
| மொத்தம் | 125645.00 |
| வங்கி வட்டி வரவு | 8557.00 |
| 30.04.13 அன்று இருப்பு | 134202.00 |

- திருத்தலக்கடை நிர்வாகிகள்

முதல் சனி மதிய உணவு கணக்கு எண் : 02110071040316 தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் இருந்த 18540.00 ரூபாய் திருக்கல்யாண மாதா திருத்தலம் 02110050303546 என்ற வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது.

**7.6.2014 அன்று பொங்கல் வழங்கியோர்**

தேனிட்டெஸ் சென்னை வாழ்பொற்பை 2500
தேஜஸ் பிரின்ஸ் ஒயிட் சென்னைவாழ் பொற்பை 2500
தண்ணீர் - 10முடை உபயம் :
**J.**இன்பராஜ், **S.**அருள்செல்வன், **K.**பீட்டர், **R.**ஜெயசிங்

**7.6.2014 அன்று ராஸ்னா வழங்கியோர்**

**A.**டென்னில் இளையராஜா -சென்னை வாழ் பொற்பை1000
**M.**திலகர் -சென்னைவாழ் பொற்பை 500
**S.**பீற்றர் -சென்னைவாழ் பொற்பை 500
**M.**டைட்டஸ் சென்னைவாழ் பொற்பை 500
**A.**டென்னிஸ் (எ) குட்டி, பொற்பை 500
அமல்ராஜ்-சென்னை வாழ்-வேப்பங்காடு 500
ரவி (எ) பிலா சென்னை வாழ் நாசரேத் 500
செல்ட்டன் திருக்கலயானி சவுன்ஸ் (கர்நாடகா) 200
பெயர் சொல்லாத நபர் 100
ஐஸ் எடுத்து வர வண்டி உபயம் ஜஸ்டின்
தண்ணீர் -3ட்ரம் உபயம்-இம்மானுவேல்

ஒருங்கிணைப்பாளர்கள் S.**ஜாண்,** A.**இன்பராஜ், சின்ன துரை**

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**07-06-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1024 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 987 பேர் |
| சுகப்பிரசவம் | - | 840 பேர் |
| நற்சுகம்பெற | - | 2103 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 768 பேர் |
| தேவஅழைத்தல் | - | 649 பேர் |
| வேலைகிடைக்க | - | 1747 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1635 பேர் |
| குடும்பசமாதானம் | - | 1943 பேர் |
| குடும்பநலன் | - | 1032 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 976 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1432 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 973 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1453 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 972 பேர் |
| மனமாற்றமடைய | - | 845 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1542 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 843 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 748 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1406 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 643 பேர் |



அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும். - பங்குத்தந்தை

உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி

kalyanamatha@gmail.com

## வரவேற்கிறோம்.

இறை ஆசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்

**M. எட்வின் சுபிதா** — **A.** மைக்கிள் சதீஷ்ராஜா, **M.** செல்வகுமாரி, பொற்பை

## வாழ்த்துகிறோம்

**02.06.2014** — **C. அந்தோணி ஆல்வின் – J. அன்பு சகாய சாந்தி**
பொற்பை



## அருள்தரும் இமயம்
# திருக்கல்யாணத்தாயின்
## அற்புதங்கள்...
## சாட்சிகள்...

குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை கிடைத்தமைக்கு நன்றி. **பீட்டர், எள்ளுவிளை**

பஸ் விபத்திலிருந்து காப்பாற்றியமைக்கு நன்றி. **மெற்றில்டா, பொற்பை**

அறுவைசிகிச்சை நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி. **தாசன், இணையம்**

மூளை ஆபரேஷன் நல்லமுறையில் நடந்தமைக்கு நன்றி.

**– ஜோனி, கலியக்காவிளை**

10ம் வகுப்பில் முதல்மதிப்பெண் கிடைத்ததற்கு நன்றி.

**– ஆஸ்பின் ரீஜா, ஹெலன் நகர்**

குழந்தை கிடைத்தமைக்கு நன்றி. – **அன்ச கேப்ரியேல், வெலினம்**

லூர்துரெக்ஸ்–மெர்லின் திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி.

**–பொற்பை**

நல்ல இல்லம் அமைந்ததற்கு நன்றி. – **ஜோதி. பாலராமபுரம்**

குடும்ப சமாதானம் கிடைத்தமைக்கு நன்றி. **–மனோஜ், பொலியூர்**

தொழில் வளத்திற்கு நன்றி. செர்லின் – **ஜேசுதாஸ். சென்னை**

நினைத்த காரியம் நடந்ததற்கு நன்றி. **–ஏசுதாசன், உவரி**

அன்னை தந்த ஆண்குழந்தைக்குநன்றி, **–சுதாகர், விஜி, மணலிகரை**

வெளிநாட்டில் வேலை கிடைத்ததற்கு நன்றி. – **வினிதா, கட்டாரிமங்கலம்**

விசைப்படகு கிடைக்க செய்த அன்னைக்கு நன்றி. – **ராஜன், புன்னக்காயல்**

பதவி உயர்வு கிடைத்ததற்கு நன்றி. **–ராஜ்குமார், நீரோடி**

வெளிநாட்டு விசா கிடைத்ததற்கு நன்றி. – **தாபோகர், புதுக்கடை**

வழக்கிலிருந்து மீட்டதற்கு நன்றி. – **ஆரோன், பெரியதாழை**

குடும்பசமாதானம் தந்த அன்னைக்கு நன்றி. **–கிளிட்டஸ், இராமன்புதூர்**

புற்றுநோயிலிருந்து பூரணசுகம் கிடைத்ததற்கு நன்றி. – அமலன் நாகர்கோவில்

தொடர் வயிற்றுவலியிலிருந்து நற்சுகம் தந்த அன்னைக்கு நன்றி.

**–கரோலின், மணலிகரை**

மேற்படிப்புக்கு இடம் நினைத்தவாறு கிடைத்ததற்கு நன்றி.

**– ரோஸன், மணப்பாடு**

மகன் திருமணம் நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி.

**–ஸ்டீபன்ராஜ், பாத்திமாமேரி, கே.டி.ச நகர்**

பல்வலியிலிருந்து விடுதலை கிடைத்தமைக்கு நன்றி.

**–அந்தோனி மெர்சி, பொற்பை.**




# அருளும், அழகும் நிறைந்த அன்னாள்

இயேசு கிறிஸ்து தோன்றுவதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்....

யூத பண்பாட்டு கலாச்சாரத்தையும், மோயீசன் சட்டத்தையும் சிறப்பாக கடைபிடித்து மெசியாவின் வருகை அண்மையில் உள்ளது என்றும், அவர் தங்கள் குலத்திலிருந்தே தோன்ற வேண்டுமென்று எஸ்தோலன், எமரென்சியா என்ற அன்புத் தம்பதியர் இறைவனை இடைவிடாது மன்றாடி ஒரு அழகிய பெண்குழந்தை யைப் பெற்றெடுத்தனர். அந்தக் குழந்தையின் பெயர் தான் அன்னாள். அன்னாள் என்றால் அனைத்து அருளும், அழகும் நிரம்பியவள் என்பது பொருள். அக்குழந்தையும் அன்பு, பணிவு, பாசம், நட்பு, பரிவு என்று தன் பெயருக்கேற்ப வளர்ந்தது. திருமணம் ஆக தக்க வயது வந்தபோது பல திறமைவாய்ந்த இளைஞர்கள் தன்னை மணமுடிக்க முயற்சி செய்த போதும் யூத குலத்து இளைஞனையே இவள் மணம் முடிக்க விரும்பினாள். யூத குலத்தில் பிறந்து இறையருளால் வளர்ந்த சுவக்கீன் என்பவரை பெற்றோர் ஆசீருடன் திருமணம் முடித்தார். அன்பு, விட்டுக்கொடுத்தல், ஏற்றுக் கொள்ளுதல், பிறரன்பு, நன்னடத்தை ஆகியவை இவர்கள் இல்லறத்தின் தனி சிறப்பு. இயல்பிலேயே இருவருக்கும் தாராள மனம் என்பதால் பிறரை வாழவைத்து இன்பம் கண்டனர். தங்கள் செல்வத்தை மூன்று பாகங்களாக பிரித்து ஒரு பாகத்தை ஆலயத்திற்கும், ஒரு பாகத்தை ஏழைகளுக்கும் கொடுத்துவிட்டு மீதமுள்ள ஒரு பாகத்தை தங்கள் வாழ்க்கைக்கு வைத்துக்கொண்டனர். செல்வங்கள் பல இருந்தும் தங்களுக்கென்று ஒரு குழந்தை செல்வம் இல்லை என்ற குறை அவர்களை வாட்டி வதைத்தது. அக்காலத்தில் குழந்தை இல்லாதது கடவுளின் சாபமாக கருதப்பட்டது.

13வயதில் திருமணமாகி 30 வயதில் பாட்டியாகிவிடும் யூத சமூகத்தில் 20 ஆண்டுகள் மழலை இல்லாதது வேதனையை அதிகரித்தது. ஒரு நாள் சுவக்கீன் ஆலயத்தில் பணி நிறைவேற்றும் போது குழந்தை இல்லாதவர்கள் யேகோவா முன் நிற்க தகுதியற்றவர் என்று பெரிய குரு ரூபன் விரட்டினார். மனம் உடைந்து மலைக்கு சென்று செபித்தார் சுவக்கீன். அதே நேரத்தில் அன்னாள் தன்வீட்டில் தனக்கு ஒரு மகவு கிடைத்தால்அதை இறைவனுக்கே அர்ப்பணித்து விடுவதாக கண்ணீருடன் வேண்டினாள். இறையருளால் அவர்களது மன்றாட்டு கேட்கப்பட்டது. இறைமகனை தன்னில் தாங்கிய மரியாள் என்னும் அன்பு பேழையை சுமந்து நிற்கும் தாயாகிறாள் அன்னாள்.

புனித அன்னாள் இறைவனின் அருளால் அமல அன்னையை பெற்ற இம்மாபெரும் புனிதத்துவத்தில் புனித அன்னாள்-சுவக்கீன் தம்பதியர்களுக்கு அதிக பங்குண்டு. மலடு என்று சொல்லப்பட்டவர்களுக்கு மீட்பரின் தாயை பெற்றெடுக்கும் பாக்கியம் கிடைத்தது. கடவுளுக்கு உகந்தவளாக, நல்ல மனைவியாக, நல்ல குடும்பத்தலைவியாக, நல்ல தாயாக வாழ்ந்தவர் அன்னாள். மரியென்னும் முத்தினை ஈன்ற அரிய சிப்பியாம் அன்னை அன்னாளுடன் சேர்ந்து ஜுலை 26ம் நாள் நம் அன்பு பாட்டி-தாத்தாவாகிய புனித அன்னாள்-சுவக்கீன் திருநாள் அன்று நாமும் சேர்ந்து இறைபுகழ் பாடுவோம்.

- அருட்சகோதரிகள்
**புனித அன்னாள் இல்லம்,** பொற்பை



# மே 2014 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** முன்னிருப்பு<br>வங்கியில் ரூ.532421.00<br>கையில் ரூ.2600.00 | 535021.00 | |
| திருப்பலி வரவுகள் முதல் சனி 125x70 | 8750.00 | |
| இதர நன்கொடை வரவுகள் | 14700.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை 8770<br>முதலூர் 550 | 9320.00 | |
| ஆலய உண்டியல் மூலம் | 158460.00 | |
| புடவைகள் ஏல வரவு | 14250.00 | |
| ஆலய வீடு வாடகை | 500.00 | |
| முதல் சனி கடைகள் மூலம் | 5870.00 | |
| பழைய வரிகள் மூலம் | 56565.00 | |
| முதல் சனி வங்கி கணக்கு முடித்த வகையில் | 18540.00 | |
| அசன கமிட்டி வங்கி கணக்கு முடித்த வகையில் | 133002.00 | |
| திருத்தல கடை வங்கி கணக்கு முடிந்த வகையில் | 64869.00 | |
| மண்டப நன்கொடைகள் மூலம் | 11000.00 | |
| அடக்கம் & கல்லறை | 1275.00 | |
| திருமணங்கள் | 3700.00 | |
| கூரை வரிகள் மூலம் வரவு | 197778.00 | |
| வணக்க மாதம் வரவு (31 x 600) | 18600.00 | |
| காணிக்கை பொருட்கள் | 12500.00 | |
| வங்கி வட்டி வரவு | 4789.00 | |
| மொத்த வரவு | **1269489.00** | |
| **செலவுகள் :** | | |
| அசன மண்டப பணிகள் 73 சிமெண்ட் மூடை | | 25020.00 |
| 5 அருட்சகோதரர்கள் உணவு வகையில் | | 1592.00 |
| முதல் சனி குருக்கள் படி | | 13200.00 |
| அசன மண்டப கான்கிரீட் பொருட்கள் + கூலி | | 20427.00 |
| ஸ்டால் ஆசாரி கூலி | | 3500.00 |
| மேக் டி.வி. விளம்பரம் | | 4000.00 |
| இளைஞர் மாநாடு டிஜிட்டல் போர்டு 4 | | 6000.00 |
| அருட்சகோ. ராஜன் படி | | 1000.00 |
| புதிய நகை மாதாவுக்கு செய்ய கூலி | | 35000.00 |
| இனிப்புகள் | | 400.00 |
| வி.பி.எஸ் ஆசிரியர்கள் பயணப்படி | | 157.00 |
| செபஸ்தியார் மேடை பந்தல் பிரிக்க | | 2000.00 |
| செய்தித்தாள் | | 165.00 |
| பள்ளி மாணவர்கள் சைக்கிள் செட் பொருட்கள்+கூலி | | 159187.00 |

| | |
|---|---|
| 8x2 பிளக்ஸ் போர்டு லெட்டர் பேடு | 2950.00 |
| எரிவாயு | 442.00 |
| அருட்தந்தை அகிலன் படி | 1500.00 |
| மருத்துவ பரிசோதனை செல்ல வண்டி வாடகை | 3000.00 |
| பள்ளி தேர்ச்சி பிளக்ஸ் போர்டு | 2900.00 |
| ஆலய பொருட்கள் | 715.00 |
| பீடப்பணியாளர்கள் சிற்றுண்டி | 300.00 |
| ஏப்ரல் முதல் சனி கூடுதல் செலவுக்கு கொடுத்தது | 67000.00 |
| மே முதல் சனி கூடுதல் செலவுக்கு கொடுத்தது | 93000.00 |
| பால் | 750.00 |
| தண்ணீர் | 540.00 |
| மளிகை பொருட்கள் | 4360.00 |
| உதவித் தொகைகள் | 2700.00 |
| ஸ்டேஷனரி | 1355.00 |
| பழங்கள் | 1065.00 |
| ஊர்ப்பொது அசன கூடுதல் செலவு | 18498.00 |
| டோபி | 250.00 |
| துணிகள் | 1908.00 |
| ஸ்டிக்கர் | 400.00 |
| மட்டன் & சிக்கன் | 900.00 |
| போன், செல்போன் கட்டணம் | 862.00 |
| டீசல் – வாகனம், ஜெனரேட்டர் | 6750.00 |
| மருந்துகள் & மருத்துவர் கட்டணம் | 2400.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| உபதேசியார் மே மாத படி | 4000.00 |
| இரவுக் காவலர் ஊதியம் | 3000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3500.00 |
| துப்புரவு பணியாளர்கள் ஊதியம் | 8000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை மே மாத படி 5 ஆண்டுகள் | 30000.00 |
| பங்குத் தந்தை திருப்பலி படி | 1500.00 |
| மறைமாவட்ட அன்பளிப்பு | 20000.00 |
| சேவை வரி | 62.00 |
| புனித வரி திருப்பலி 155 x 5 = 775.00 | |
| ஆசீர்வாதம் 30 x 5 =150.00 | |
| திருமணம் 6 x 8 = 48.00 | |
| அடக்கம் 2 x 7 = 14 | |
| திருப்பலி 125 x 50 = 6250.00 | 7237.00 |
| மொத்த செலவுகள் | **573492.00** |

| | |
|---|---|
| மொத்த வரவு<br>மொத்த செலவு | ரூ.1269489.00<br>ரூ. 573492.00 |
| இறுதியிருப்பு | ரூ. 695997.00 |

| | |
|---|---|
| வங்கியில்<br>கையில்<br>மொத்தம் | ரூ. 670586.00<br>ரூ. 25411.00<br>ரூ.695997.00 |

– பங்குத்தந்தை

புனிதர்களின் வரலாறு :

# புனித பொனவெந்தூர்

இவரது ஞானஸ்நானப் பெயர் ஜாண், குழந்தைப் பருவத்தில் இவருக்கு ஒரு நோய் வந்தது. புனித அசிசி பிரான்சிஸ் இவரை புதுமையாக குணப்படுத்தினார். இவரால் ஏராளமான நன்மைகள் வரும் என்று புனித பிரான்சிஸ் முன்னறிவித்தார். போனா என்றால் நன்மைகள், வந்தூர் என்றால் வர இருக்கின்றன. எனவே பொனவந்தூர் என்ற பெயர் இவருக்கு வழங்கலாயிற்று. 22-ம் வயதில் இவர் பிரான்சிஸ்கன் சபையிலே சேர்ந்து பாரிஸ் நகரில் இரண்டு சிறந்த ஆசிரியர்களிடம் கல்வி பயின்றார். புனித தாமஸ் அக்குயினாஸ் இவருடைய உற்ற நண்பர், இவரும் புனித தாமசும் அறிஞர் பட்டம் பெறும் நாள் வந்தது. இருவருமே தாழ்ச்சி நிறைந்தவர்கள். இந்தப் பட்டத்தை தாமஸ் முதலில் பெற வேண்டும் என்று இவர் வற்புறுத்தினார். தாழ்ச்சி மிகுந்த தாமஸ் மறுக்கமுடியாமல் இவரது விருப்பத்திற்கு இணங்கினார். இவர் பிரான்சிஸ்கு சபையின் தலைவரானார். இவரது முயற்சியால் சபையில் அமைதி ஏற்பட்டது. இவர் புனித பிரான்சிஸ் அசிஸி-ன் வாழ்க்கை வரலாற்றை எழுதிக் கொண்டிருந்தார். அப்போது புனித அக்குயினாஸ் தாமஸ் இவரைப் பார்க்க வந்தார். ஒரு புனிதர் இன்னொரு புனிதரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறார். என்று தாமஸ் கூறி அகன்றார். பாப்பானவர் இவரை கர்தினால் ஆக்க தீர்மானித்து, பதவிக்குரிய தொப்பியை தம்முடைய பிரதிநிதிகள் வழியாக அனுப்பினார். பிரதிநிதிகள் மடத்துக்குச் சென்று எங்கும் இவரைத் தேடினார்கள். இவர் அகப்படவில்லை. இறுதியாக இவரை சமையல் அறையில் கண்டார்கள். உணவுத் தட்டுகளை இவர் கழுவிக்கொண்டிருந்தார். பிரதிநிதிகள் திகைத்தார்கள். நம் புனிதரோ அமைதியாக அவர்களை நோக்கி, தொப்பியை தயவு செய்து அந்த மரத்தில் தொங்கவிட்டுச் செல்லுங்கள் என்றார். சாகுமுன் தம் பதவியை விட்டு விலகினார். 1274ம் ஆண்டில் 2வது லையன்ஸ் நகர்ச் சங்கம் நடக்கும்போது இவர் இறந்தார்.




**சிந்தனை :** பெரிய காரியங்களைச் செய்வதில் அல்ல, ஆனால் சாதாரண காரியங்களை சிறந்த விதமாக செய்வதில் உத்தமதனம் அடங்கியிருக்கிறது.

**செபம் :** ஆண்டவரே எனக்கும் நான் நேசிக்கிறவர்களுக்கும் என்னைச் சார்ந்தவர்களுக்கும் தாழ்ச்சி என்னும் வரத்தை தாரும்.

–**சகாயஜெனிலா,** பொற்பை

# புனித அன்னாள் பாதம் பணிந்து...

ஆண்டவர் இயேசுவின் மறைவுடலாம் திருச்சபை
ஆல்போல் தழைத்திட விழுதுகளாய் தாங்கி நிற்கும்
அருட்தந்தையரோடு இணைந்து செயலாற்றிட
ஆயன் இயேசு தேர்ந்துகொண்ட அன்பின்
அருட்பணியாளரே துறவற கன்னியர் சபையினர்!
ஆண்டவர் இயேசுவின் சீடர்களில் பெண்கள்
ஆற்றினாரே பணி தம் உடைமையைக் கொண்டு
அதுபோல் தங்கள் உள்ளத் தூய்மையால் – பணி
ஆற்றுபவரே துறவற கன்னியர் சபையினர்!


எழுவோம் அன்னாள் பாதம் தொழுவோம்
எழுவோம் பணி பல கொள்வோம்
என்பதை உரிமைக்கீதமாய் கொண்டவரே
புனித அன்னாள் சபை கன்னியர்கள்!

அன்னை மரியாளை பெற்று சீராட்டி வளர்த்து
ஆண்டவரின் மீட்புத் திட்டத்திற்கு அர்ப்பணித்த
அன்புத் தாயே புனித அன்னம்மாள்!
அவரின் பாதம் பணிந்து சபை தலைவியாகக் கொண்டு
அன்பு சேவை கருணை என்ற கொள்கையோடு
தமிழகத்தில் திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு
தரணியெங்கும் கிளை பரப்பி துளி வீசுபவரே
புனித அன்னாள் சபை கன்னியர்கள்!

பிறந்து வளர்ந்து பல திசைகள் ஆனாலும்
அன்பினால் கட்டுண்டனரே ஒரு குடையின் கீழ்
யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
என்றே ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண

ஏழை எளியோர்க்கு செய்தனரே அன்புப்பணி
கல்லாமையை இல்லாமை ஆக்க ஆற்றிய
கல்விப் பணி கண்டு வியக்கின்றது அகிலம்
சேவை மனப்பான்மையோடு ஆற்றிய தொண்டே
சேரிகள் தோறும் மருத்துப் பணியாம்
கருணை தெய்வமாய் நின்றனரே –

செபிப்போம் இவர்களின் பணி சிறந்திடவே
எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனிடம்!
திருக்கல்யாண அன்னையின் வழிநின்று!




– **ம.மிக்கேல் உஷா**, பொற்பை

# கவிதைச் சோலை

## தாய் இல்லையேல் நானில்லையே...

தாங்கினாள் என்னைக் கருவோடு
ஏங்கினாள் எந்தன் நினைவோடு
அதட்டினாள் என்னை கனிவோடு
அரவணைத்தாள் தாய் அன்போடு
உண்பித்தாள் அறுஞ் சுவைகளோடு
உருவாக்கினாள் பல பண்புகளோடு
வேர் இல்லையேல் பூக்கள் இல்லையே!
தாய் இல்லையேல் நான் இல்லையே!
பெற்ற தாயை என்றும் மறவோம்
தாயினும் மேலாம் திருக்கல்யாணத்தாயை
என்றுமே மறவோம்!

– **அந்தோணி மெர்சி,** பொற்பை

## சேயாய் நான்...

நிலவாய் நீ,உன்மீது
தவழும் மேகமாய் நான்
கடலாய் நீ ,உன்மீது
தவழும் அலையாய் நான்
நிலமாய் நீ,உன்மீது
தவழும் ஆறாய் நான்
தாயாய் நீ, உன் மடியில்
தவழும் சேயாய் நான்
அருளாய் நீ,உன் மீது
தவழும் பக்தனாய் நான்
திருக்கல்யாணத்தாயின்
ஆசிபெற்றோர் பேறு பெற்றோர்

– **ஸ்டெபி,** பொற்பை

## மாசற்ற அருள் மரியே...

தன்னையே உலகுக்கு
தாபரமாய் தந்த அன்னையே
நற்றிணை குறுந்தொகையாய்
நானிலப் புகழ் பெற்றவளே
பங்கயமாய் மலர்ந்து
பொற்பையில் குடிபுகுந்த தாயே
மயங்கொலியாய் இசைகேட்டு
மகிழச்செய்யும் தாய்மரியே
மாரியாய் அருளைப் பொழிவாய்
மாசற்ற அருள் மரியே

–**ஜோஸ்பின் மேரி தாசன்,**
கவரப்பேட்டை

## பொற்பை..

பொன்றா வனப்புடைய பொற்பை
பொங்கிடும் அன்னையின் புகலிடம் பொற்பை
ஒன்றுபட்ட பக்தர்கள் உள்ள பொற்பை
ஒருமித்து மாதாவை வழிபடுமிடம் பொற்பை
கல்வியில் சிறந்த பொற்பை
கருத்துக் குவியலில் ஓங்கும் பொற்பை
திருத்தல வரம் பெற்ற பொற்பை
திருத்தூதர் காத்திடும் பொற்பை
ஆசீர்வதித்து வாழ்த்திடும் பொற்பை
ஆரவாரமாய் பொங்கிடும் பொற்பை

–**சுகிர்தமணி அன்பரசன்,** கவரப்பேட்டை

## என்றென்றும் உன்னுடன்...

திருக்கல்யாணத் தாயே
வானத்தைவிட்டு
நிலவு பிரிந்தாலும்
மரத்தை விட்டு
இலை உதிர்ந்தாலும்
கடலை விட்டு
அலை பிரிந்தாலும்
நீ என்றென்றும் என்
இதயத்தை விட்டு
பிரிய மாட்டாய்

–**சகாயஜெர்லின்,** பொற்பை

# ஞான மேய்ப்பர்கள்

இப்புவி நிறைய பொன் தந்தாலும் திருப்பலிக்கு ஈடு இணை ஏது? இறைவனில் தன்னை முழுமையா அர்ப்பணித்த தியாக தீபங்கள். உம் திருவுளத்தை நிறைவேற்ற எனக்கு கற்பித்தருளும் ஏனெனில் நீரே என் கடவுள். உமது நலமிகு ஆவி என்னை செம்மையான வழியில் நடத்துவதாக. திருப்பாடல். 143:10

1 இறை அழைத்தலின் வழியாக பரிசுத்த ஆவியின் அபிஷேக வல்லமையைப் பெற்றுக்கொண்டவர்கள் இறைபணி சேவையை இறுதிவரை அன்போடு செயலாற்றி இறைவனுக்கு சான்று பகிர்ந்து சாட்சியாக வாழ்ந்து காட்டுபவர்கள். எளிமை வாழ்வை தமதாக்கி வாழும் இவர்கள் இறைவன் பார்வையில் பேறுபெற்றவர்கள். தன்னலம் துறந்து மெழுகாக உருகி ஒளிகொடுப்பவர்கள். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்முத்துக்கள். தாய் திருச்சபையின் தூண்களானவர்கள்.


2. தேவ திரவிய அனுமானங்கள் பெற்றுத் தருவதில் வரப்பிரசாதத்தின் பாத்திரமானவர்கள். பாவமன்னிப்பு வழங்குவதிலும், இறையாசீர் வழங்குவதிலும் இறைவனில் ஒப்புரவானவர்கள்.மனதளவில் அறிக்கைகளை பெட்டகமாக்கி உடைக்கப்படாத முத்திரை பதிக்கப் பெற்றவர்கள். திருப்பலியில் ஆண்டவரின் திரு உடலையும், திரு இரத்தத்தையும் கையிலேந்தி உண்ணவும் அருந்தவும் பேறுபெற்றவர்கள். இறைவார்த்தைகளால் மறையுரை வழங்கி ஆன்மீகத்தை தழைக்கச் செய்வதில் ஞானத்தின் பொக்கிஷமானவர்கள்.

3. மந்தைகளை சிதறவிடாமல் காத்து வழிநடத்துவதிலும், ஞானமேய்ப்பனானவர்கள். இறைபணியாற்றிடும் ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் இவர்களே ஞானதீபமாக திகழ்பவர்கள்.

தியாக தீபங்கள் இவர்கள்.

– **செல்லம்மாள்,** பொற்பை.

# வெற்றி மலரும்...!




**மலரும் மலர்கூட**
**வாசம் தந்து தான் உதிர்கிறது**
**அழுகும் கனிகூட**
**சுவைதந்து தான் அழுகுகிறது**
**கடலில் சேரும் நதிகூட**
**சுவை தந்து தான் சேர்கிறது**
**உருகும் மெழுகுகூட**
**ஒளி தந்துதான் உருகுகிறது**
**மறையும் சூரியன் கூட**
**ஒளிதந்து தான் மறைகிறது**
**நீ... மட்டும்... ஏன் தோல்வி கண்டு வாடுகிறாய்**
**தோல்விகூட வெற்றி தந்துதான் தோற்கிறது.**
**வருந்தாதே.... தோல்வி உதிர வெற்றி மலரும்...**

–**டே. கீர்த்திகா,** வெள்ளக்கோவில்.

# ஒரு வரி உண்மைகள்....



- பாம்பின் பற்கள் இரையைக் கடித்துத் தின்ன உதவுவதில்லை.
- கண்களுக்கு பின் உள்ள துவாரம் மூலமே காகம் கேட்கிறது.
- மீன்களுக்கு கூர்மையான பார்வை; மந்தமான காதுகள்
- நத்தை I மைல் தூரத்தைக் கடக்கு மூன்று வாரம் ஆகும்.
- நீரை உறிஞ்சிக்குடிக்கும் பறவை புறா மட்டும் தான்.
- ஈக்களுக்கு பற்கள் கிடையாது.
- யானை நடந்தால் சத்தமே எழுவதில்லை
- பறவையின் கண்கள் நீளவடிவில் அல்லாமல் வட்ட வடிவிலே இருக்கும்
- ஈ, எறும்பு முதலிய பூச்சிகள் முழுச் செவிடு
- ஒட்டகச் சிவிங்கியின் கழுத்தில் 7 எலும்புகளே இருக்கும்.








-மேரி பிரின்ஸ்லா, பொற்பை

# அறிவோம் அமிலம்



| | | |
|---|---|---|
| எலுமிச்சையில் | – | சிட்ரிக் அமிலம் |
| தக்காளியில் | – | ஆக்ஸாலிக் அமிலம் |
| ஆப்பிளில் | – | மாலிக் அமிலம் |
| திராட்சையில் | – | டார்டாரிக் அமிலம் |
| புளியில் | – | டார்டாரிக் அமிலம் |
| எறும்பு கடிக்கையில் | – | பார்மிக் அமிலம் |
| மயக்க மருந்தில் | – | பார்பியூச்சரிக் அமிலம் |
| நைலான் தயாரிப்பில் | – | அடிப்பிக் அமிலம் |
| புளித்த காடியில் | – | அசிட்டிக் அமிலம் |
| கார் பேட்டரியில் | – | சல்பியூரிக் அமிலம் |












-P.ஜோசுவா, சாத்தை

# குட்டீஸ் கார்னர்




ஹாய் குட்டீஸ்!

போன மாதம் புது வகுப்புப்புக்கு போயிருப் பீங்க! புதுப் புது ப்ரெண்ட்ஸ் எல்லாம் கிடைச்சிருப்பாங்க!!

எல்லார்கிட்டேயும் அன்பா பழகணும் சண்டையெல்லாம் போடக்கூடாது. டீச்சர் நடத்துற பாடத்தை நல்லா கவனிச்சு வந்தா பரீட்சையிலே நல்லா மார்க் எடுக்கலாம்.

தினமும் வீட்டுல வந்து பாடம் படிப்பதுபோல தினமும் காலை மற்றும் இரவு நேரங்களில் நம்ம இயேசப்பாவிடமும், திருக்கல்யாண அன்னையிடமும் பேசணும்! என்ன புரியலையா? டெய்லி நல்லா ஜெபம் பண்ணணும்! இந்த மாதம் உங்களுக்காக அருகே இரண்டு புதிர்கள் உள்ளன. விளையாடி மகிழுங்கள்....

மேலே உள்ள படத்தில் குறைந்த பட்சம் 6 வித்தியாசங்கள் உள்ளன. 6 வித்தியா சங்களையும் 6 நிமிடங்களில் (360 செகண்ட்ஸ்) கண்டு பிடிப்பவர்கள் தான் திறமைசாலிகள்..!..?



**வழி காட்டுங்கள் குட்டீஸ்!**

– ம. எல்ரோய் ராயன், மும்பை

# உலகத் திருச்சபை செய்திகள்



## இயேசுவை அறிந்து கொள்ள...

இயேசுவை அறிந்து கொள்வதற்கு எண்ணங்களைவிட உள்ளத்து உணர்வுகள் அதிக உதவியாக இருக்கும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைத்துள்ளார். எண்ணங்களால் இயேசுவைப் புரிந்துகொள்ளமுடியும் என்ற எண்ணம் ஆதிகால திருச்சபையிலும் இருந்தது என்று சுட்டிக்காட்டியவர், எண்ணங்களின் பாதையில் நெடுந்தூரம் பயணித்தவர்கள், திரும்பிவர வழி தெரியாமல் உண்மை இறைவனைக் கண்டுகொள்ள முடியாமற் போயிற்று என்றும் கூறினார். செபம், அருள் அடையாளங்கள், விவிலியம் என்று மூன்று வாசல்களைத் திறந்தால் இயேசுவை சந்திக்கமுடியும். ஓர் எண்ணம் மதியற்று தாறுமாறாகச் செல்வதே தவறான படிப்பினைகளாக மாறுகின்றன என்று கூறினார் திருத்தந்தை.

## ஆசியாவின் குடும்பங்கள் எதிர்நோக்கின் ஒளிகள்...

கடந்த மே மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடந்த கிறிஸ்தவ மாநாட்டில் கலந்துகொண்ட திருத்தந்தை அவர்கள் ஆசிய கத்தோலிக்க குடும்பங்களுக்கு அளித்த செய்தி என்னவென்றால், கிறிஸ்துவின் அன்பைப் பரப்பும் வகையில் கிறிஸ்தவக் குடும்பங்கள் புளிப்பு மாவாக இவ்வுலக மக்களிடையே செயலாற்ற வேண்டும் என்பதே. மூன்று நாட்கள் நடந்த இந்த மாநாட்டில் ஆசியாவின் குடும்பங்கள் எதிர்நோக்கின் ஒளிகள் என்ற தலைப்பில் உரையாற்றிய திருத்தந்தை அவர்கள் இதை தெரிவித்துள்ளார்கள். குடும்பப் பணி திருப்பீட அவையின் செயலர் ஆயர், ஜீன் டாவிட்டா துவக்கி வைத்த இந்த மாநாட்டில் இந்தோனேஷியா, லாவோஸ், கம்போடியா, தாய்லாந்து, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், தைவான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயர்கள் குருக்கள் கலந்து கொண்டார்கள்.

## இன்ப அதிர்ச்சி கொடுத்த திருத்தந்தை....



சென்ற மாதம் (ஜுன்) 21ம் தேதி தெற்கு இத்தாலியில் உள்ள கேலப்ரியா என்ற இடத்தின் நெடுஞ்சாலையில் திருத்தந்தை காரில் சென்று கொண்டிருக்கும்போது சாலையோரத்தில் ஒரு குடும்பம் நின்று கொண்டு திருத்தந்தை கண்ணில் படுமாறு ஒரு பேனரை தூக்கிக் காட்டியது. அதில் இருந்த வாசகங்கள் 'Please Pope stop here to see an angel who has been waiting for you', and 'Please come and bless little Roberta'. பேனரைப் பார்த்த போப் உடனே ஓட்டுனரிடம் காரை நிறுத்தச்சொல்லி, இறங்கியவர் நேராக அந்த குடும்பதினரிடம் சென்று ராபர்ட்டா என்ற உடல் ஊனமுற்ற பெண்ணை சந்தித்து ஆசீர்வதித்துச் சென்றுள்ளார். அவரது சகோதரி பமீலா கூறும் போது “இன்று வரை எனனால் நம்பமுடியவில்லை” என்று ஆச்சரியம் கலந்த உணர்வில் கூறியுள்ளார்.

# புனித லெயோலா இன்னாசியார்



இவர் அரச அரண்மனையில் வளர்ந்தார். பின் இராணுவத்தில் சேர்ந்தார். இவரது திறமையை எல்லோரும் புகழ்ந்து பேசினார்கள். ஒருமுறை போரில் கடும் காயப்பட்டார். மருத்துவமனையில் இருக்கையில் பொழுது போவதற்காக படிக்கும்படி வீரர்களின் வரலாறுகளைக் கேட்டார். அவை கிடைக்கவில்லை. புனிதர்களின் வரலாறுகளே கிடைத்தன. அவற்றைப் படித்தபின் உலக மகிமை நிலையற்றது என்று கண்டு தம்மை கடவுளுக்கு அர்ப்பணிக்க உறுதி செய்தார். பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்தபின் மன்ரேசா என்னும் இடத்தில் பத்து மாதங்களாக தனிமையில் வாழ்ந்து செபமும் தவமும் செய்தார். அங்கேதான் ஞான முயற்சிகள் என்னும் அரிய நூலை எழுதினார். உரோமை, பாலஸ்தீனா இந்த இடங்களுக்குப் போய்த்திரும்பியபின் கல்வி கற்கத் தொடங்கினார். பாரீஸ் நகரில் கல்வி கற்கும் போது இவரது புண்ணிய வாழ்வையும் ஞானத்தையும் கண்ட பாப்பானவரிடம் தங்களைக் கையளித்து அவர் சொற்படி கடவுளுக்கு சேவை செய்ய இவர்கள் உறுதி செய்தனர். வெனிஸ் நகரில் இவரும் இவருடைய தோழர்களும் குருப்பட்டம் பெற்றார்கள். இயேசு சபை விரைவில் பரவியது. இஞ்ஞாசியார் உரோமையில் தங்கி சபையை ஸ்திரப்படுத்தி வந்தார் தமது சபையைச் சேர்ந்தவர்கள் தரித்திரம், விரதத்துவம், கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாடுகளோடு பாப்பானவருக்குக் கீழ்ப்படிவேன் என்று உறுதி கூறவேண்டும். இயேசு சபையின் விருதுவாக்கியம் கடவுளின் அதிமிகு மகிமைக்காக என்பதே மனிதனது வாழ்வின் நோக்கம் கடவுளை மகிமைப்படுத்துதே. கடவுளுக்குப் பிரியமானதையே இஞ்ஞாசியார் எப்பொழுதும் செய்து வந்தார்.

**சிந்தனை :** காரியங்கள் எவ்வளவு நம்பிக்கையற்றதாகத் தோன்றுமோ அவ்வளவு அதிகமாகக் கடவுள் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். மனித உதவி நம்மைக் கைவிடும் போது கடவுளது உதவி நமக்கு அண்மையில் இருக்கிறது.

**செபம் :** ஆண்டவரே நாங்கள் அனைத்தையும் உமது மகிமைக்காகவும் பாவிகள் ஈடேற்றத்திற்காகவும் செய்யும் வரம் தாரும். ஆமென்.




01.06.2014 இன்று நமது திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் நமது புதிய பங்குத்தந்தை அருட்திரு. ஜோசப் ரவிபாலன் அவர்கள் இயேசுவின் விண்ணேற்பு பெருவிழா திருப்பலி ஒப்புக் கொடுத்தார்கள்.

02.06.2014 கோடைவிடுமுறைக்கு பின் நமதுபங்கில் உள்ள அனைத்து பள்ளிகளும் திறக்கப்பட்டு காலை 11 மணிக்கு நமது பள்ளிகளின் தாளாளர் தந்தை அருட்திரு. ஜோசப் ரவிபாலன் அவர்களால் சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

04.06.2014 அன்று மாலை திருத்தல வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் பங்குத்தந்தை அவர்களால் திருப்பலி நடைபெற்றது.

07.06.2014 அன்று முதல் சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றது.

08.06.2014 அன்று தூய ஆவியானவர் பெருவிழா திருப்பலியைத் தொடர்ந்து ஆலய உண்டியல்கள் எண்ணப்பட்டன. அதன்பின் பங்குப் பேரவைகூட்டம் நடைபெற்றது. கடந்த ஓராண்டாக நமது பங்கில் பணியாற்றிய அருட்சகோதரி ஜாண்கிரேஸி அவர்கள் பணிமாறுதல் பெற்று சென்றதால் புதிதாக பணியாற்ற அருட்சகோதரி ஆன்ஸி லிதியா நமது பங்கிற்கு வருகை தந்துள்ளார்கள்

11.06.2014 அன்று மாலை நான்கு சந்தி கெபியில் பங்குத் தந்தை அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

13.06.2014 அன்று புனித பதுவை அந்தோணியார் திருவிழா திருப்பலி நமது திருத்தலத்தில் பங்குத் தந்தை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

15.06.2014 அன்று மூவொரு இறைவன் திருவிழா திருப்பலி நமது திருத்தலத்தில் பங்குத்தந்தை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு சாத்தான்குளத்தில் வைத்து பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது.

1. முதல் சனி தவிர்த்து மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு மெழுகுவர்த்தி ஏந்தி செபமாலை செபித்தல், கோயிலை சுற்றி மதா சப்பரபவனி அதன்பின் நவநாள் செபம், நவநாள் திருப்பலியும் நடைபெறும்.

2. ஆகஸ்ட் மாதத்திலிருந்து பங்குபேரவை முடிவுபடி முதல்சனி வழிபாட்டில் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 9 மணி முதல் 10 மணிவரை குணமளிக்கும் செப வழிபாடு. 10 முதல் 11 மணிவரை மலையாள மொழியில் திருப்பலியும், 11 மணி முதல் 12 மணி வரை செபமாலை, சப்பரபவனி, 12 மணி முதல் 1.15 வரை தமிழில் திருப்பலி தேவைப்பட்டால் 4 மணிக்கு சிறப்புத்திருப்பலி, 6.30 மணிக்கு திருப்பலி.

3. காணிக்கை பொருட்கள் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திராட்சை ரசம் ரூ.50/- அப்பம் ரூ.50/-.

4.திருத்தல அலுவலகம் (பழைய திருத்தலகடை) விரைவில் திறக்கப்படும். காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்படும். திருமதி. அந்தோனி கன்சிலா மேரி அலுவலக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். காணிக்கை பவனிக்கு காணிக்கை பொருட்கள் பெற பங்கு அலுவலகத்தில் பணம் செலுத்தி ரசீதை பெற்று திருப்பண்ட அறையில் (சக்ரிஸ்) காணிக்கை பொருட்களை அங்கு பெற்றுக் கொள்ளலாம். திருப்பலி கருத்துக்கள் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யலாம். பங்கில் பல்வேறு வரிகளையும் பங்கு அலுவலகத்தில் செலுத்தலாம்.

5. திருத்தல வழிபாட்டு குழு அமைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு பக்த சபைகளி லிருந்தும் ஆர்வமுள்ள ஒருவர் அல்லது இரண்டுபேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

6. வார வழிபாட்டை அன்பியங்களும் முதல்சனி மற்றும் பிற சனிக்கிழமைகள் வழிபாடுகளை பக்த சபைகளும் பொறுப்பேற்று நடத்தவேண்டும்.

7. ஞாயிறு திருப்பலி வழிபாட்டிற்கு பீட அலங்காரங்களை அந்த வாரம் குறிப்பிட்ட அன்பியங்கள் பொறுப்பேற்று தயாரிக்க வேண்டும்.

8. விசுவாசிகள் மன்றாட்டு, ஐந்து மன்றாட்டுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.1. திருத்தந்தை மற்றும் திருச்சபைக்கருத்துக்காக 2. உலகக் கருத்துக்காக 3. நாட்டின் கருத்துக்காக 4. பங்கு,திருத்தல கருத்துக்காக 5. பொதுக்கருத்துக்காக

9. வாசகங்கள் வாசிப்பவர்கள் பக்தியுடன் தெளிவாக வாசிக்கவேண்டும்.

10. அன்பியங்கள் சிறப்பாக நடைபெறவேண்டும். அன்பிய கூட்டங்கள் தவறாமல் நடத்தப்படவேண்டும்.

11. அந்தந்த பகுதி அன்பியத்தார் உதவியுடன் பங்குத் தந்தை வீடுகளை சந்திக்க விரைவில் வருகை தருவார்கள்.

12. திருப்பலியில் பள்ளி மாணவ. மாணவிகளை கட்டாயம் பங்குபெற செய்ய வேண்டும். பெற்றோர்கள் இதில் அதிக அக்கரை எடுத்து குழந்தைகளை திருப்பலியில் பங்குபெற செய்யவேண்டும்.

13. பங்கில் உள்ள வரிகளை குறித்த காலத்தில் செலுதத பங்கு மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

17.06.2014 நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களால் பள்ளி ஆண்டாய்வு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

20.06.2014 அன்று இயேசுவின் திரு இருதய நண்பர்கள் சபை திருவிழா நவநாட்கள் ஆரம்பமாகியது.

21.06.2014 அன்று மாலையில் மெழுகுவர்த்தி ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக் கொண்டு கோயிலை சுற்றி மாதா சப்பரப்பவனி நடைபெற்றது. அதன்பின் நவநாள் ஜெபம் ஜெபித்து பங்குத் தந்தை அவர்களால் மாதா நவநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

22.06.2014 ஆண்டவரின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழா திருப்பலி நமது திருத்தலத்தில் பங்குத்தந்தை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

27.06.2014 இயேசுவின் திரு இருதய பெருவிழா திருப்பலி நமது பங்கு தந்தை அவர்களால் நமது திருத்தலத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்று மாலை

இயேசுவின் திருஇருதய நண்பர்கள் சபை திருவிழா சிறப்பு மாலை ஆராதனையில் சபையில் புதிய உறுப்பினர்களும், புதிய பொறுப்பாளர்களும் பங்குத்தந்தை அவர்களால் நியமிக்கப்பட்டார்கள்.

28.06.2014 மரியாயின் மாசற்ற இருதய பெருவிழாவான அன்று மாலை மெழுகுவர்த்தி ஏந்தி செபமாலை செபித்துக்கொண்டு கோயிலை சுற்றி மாதா சப்பரபவனி நடைபெற்றது. அதன்பின் நவநாள் செபம் செபித்து பங்குத் தந்தை அவர்களால் மாதா நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

29.06.2014 அன்று இயேசுவின் திரு இருதய நண்பர்கள் சபை திருவிழா திருப்பலி பங்குத் தந்தை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

# பங்குப்பேரவை கூட்டத் தீர்மானங்கள் :

1.திருத்தல அலுவலகத்தில் பணி செய்ய அந்தோனி சுசீலா மேரி என்பவரை நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. பணி நேரம் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையும், ஞாயிறு மற்றும் முக்கிய விழாக்களில் காலை 6.00 மணிக்கு அலுவலகம் திறக்கவும் பணி விபரங்கள் பங்குத் தந்தையின் அறிவுரையின்படி செய்யவும் முடிவு செய்யப்பட்டது. சம்பளமாக ரூபாய் 4000/- வழங்க தீர்மானிக்கப்பட்டது.

2. காணிக்கைப் பொருட்கள், அப்பம், மற்றும் இரசம் விலை ரூபாய் 50/- என்று நிர்ணயம் செய்யப்பட்டது.

3. உபதேசியார் பணிக்கு உதவி செய்ய பிரான்சிஸ் தேவராஜ் என்பவரை நியமிக்க ஏற்கனவே முடிவு செய்தும் பிரான்சிஸ் தேவராஜ் பணி செய்ய வராததால் அந்தப் பணி நியமனம் செய்வது தற்போது ஒத்திப்போட தீர்மானிக்கப்பட்டது.

4. ஆண்கள் தொடக்கப்பள்ளியில் ஏற்கனவே இரண்டு ஆசிரியர்கள் கூடுதலாக பணி அமர்த்தப்பட்டார்கள். அவர்களில் ஒருவரை மட்டும் தேர்வு செய்து நியமிக்க முடிவு செய்யப்பட்டது. சம்பளம் மாதம் ரூபாய் 3000/- கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

5. கோவில் வீட்டில் குடியிருக்கும் ஒரு குடும்பத்தினர் அதிகமான நபர்களை குடியமர்த்தி இருப்பதால் அந்த குடும்பத்தாரை வீட்டிலிருந்து அப்புறப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

6. முதல் சனிக்கிழமை அன்று காலை 9.00மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஆராதனை, 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாளத்தில் திருப்பலியும் 11.00 மணி முதல் 12.00 மணி வரை சப்பரப்பவனியும் 12.00 மணி முதல் தமிழில் திருப்பலியும் நடைபெறும். இந்த நடைமுறைகள் 01.08.2014 அன்று முதல் அமுலுக்கு வரும்.


7. ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6.30 மணிக்கு கையில் எரியும் மெழுகுவர்த்தி ஏந்தி சப்பர பவனி நடத்த தீர்மானிக்கப்பட்டது.

## இதய அஞ்சலி

| | | | |
|---|---|---|---|
| 1. | கிரேஸ் அம்மாள் | பொற்பை | 12.6.2014 |

உலகப்புகழ் பெற்றவர்கள் :

# டேவிட் பென்குரியன்



யூதர்களுக்கென்று தனி நாடு உருவானதும் அதன் பிரதமராகப் பொறுப்பேற்றவர். 1942 முதல் 1953 வரையும், 1955 முதல் 1963 வரையும் அப்பதவியில் இருந்து மக்களின் ரேன்பைப் பெற்றவர். 1886-ல் போலந்தில் பிறந்த இவர் மிகுந்த சிரமங்களுக்கிடையே 1906-ல் பாலஸ்தீனத்தை அடைந்து அங்கு யூதர்கள் நாட்டை உருவாக்க அரும்பாடு பட்டார். 1915-ல் அங்கு முதல் தொழிற் சங்கத்தை அமைத்து பணியாற்றினார். 1930 முதல் 1955 வரை தொழிற்கட்சியின் தலைவராக இருந்தவர். 1948-ல் பிரிட்டிஷ் பாதுகாப்புப் படைகள் வசம் இப்பகுதி இருந்தபோது அதைக் கடுமையாக எதிர்த்துகிளர்ச்சி செய்து இஸ்ரேல் சுதந்திர நாட்டைப் பிரகடனப்படுத்தினார். பிரிட்டிஷ் படைகள் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. புதிதாக உருவான நாட்டைப் பல வழிகளிலும் முன்னுக்கு வரச் செய்த இவர் 1973-ல் காலமானார்.



இளம் வயதில் மனைவியுடன்...


Ben-Gurion and his wife, Paula (1905)

புகழ் பெற்ற இந்தியர்கள் :

# சுரேந்திரநாத் பானர்ஜி

கல்கத்தாவில் 1848-ல் பிறந்த இவர் ஐ.சி.எஸ் படித்து, உதவி மாஜிஸ்டிரேட்டாகப் பணியாற்றியபோது ஒரு தவறான உத்தரவைப் பிறப்பித்ததாக கூறி அரசு வேலையிலிருந்து நீக்கியது. சில காலம் ஆங்கிலப் பேரரசிரியராக வேலை பார்த்தவர், ஒரு சிறு பள்ளியின் பொறுப்பை மேற்கொண்டு விரைவிலேயே அதைக் கல்லூரியாக உயர்த்தினார்.

டபிள்யூ.சி.பானர்ஜியிடமிருந்து பெங்காலி என்ற பத்திரிகையை 1875ல் விலைக்கு வாங்கி அதன் ஆசிரியராக 1920 வரை நடத்தினார். இந்திய தேசிய காங்கிரஸ் அமைவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர். மத்திய சட்டசபையிலும், கல்கத்தா கார்ப்பரேஷனிலும் பல வருடங்கள் பணியாற்றியவர். வங்காளம் பிரிக்கப்பட்டபோது மக்களின் மாபெருந் தலைவராக உயர்ந்தவர். 1920-ல் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் வந்தபோது, அதை ஆதரித்து வங்காளத்தில் அமைச்சர் ஆனார். மக்களிடம் பெரு மதிப்பைப் பெற்றிருந்தவர்களின் பெருமை இதனால் குன்றியது. மிகச் சிறந்த பேச்சாளரான இவர் சுதேசி இயக்கத்தில் ஆற்றிய பணியை மதித்து அவரைப் போற்றினர். 1925-ல் இவர் காலமானார்.



## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. புத்துயிர்
5. அறிவுரை
9. திருமணத்தை
13. வாயிலில்
17. திருமுன்
21. அன்பில்

**வலமிருந்து இடம் :**

2. அருள்பொழிவு
6. நங்கூரம்
10. உதடுகள்
14. நிலைத்திருக்கும்
18. சான்று
22. பத்மு

**மேலிருந்து கீழ்**

3. வலப்பக்கம்
7. திருத்தூயகம்
11. செயல்
15. மூலைக்கல்
19. விரும்பவில்லை

**கீழிருந்து மேல் :**

4. உயர்முதல்
8. வாழும்
12. நிறைவு
16. வாக்குறுதி
20. அன்பின்
24. ஆமென்

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1.ரெஜினாள் மேரி | பொற்பை |
| 2.அந்தோனி ஏசுதாசன் | பொற்பை |
| 3.தெரஸ்வின் ராஜன் | பொற்பை |
| 4.மேரி லீலா | பொற்பை |
| 5.கபிரியேல் மேரி | பொற்பை |
| 6.ஜெயந்தி தங்கம் | பொற்பை |
| 7.மரிய வர்கீஸ் ஜெனிபர் | பொற்பை |
| 8.குயின்ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| 9.பிரின்ஸஸ் ஜேம்ஸ் | பொற்பை |
| 10.ஜோஸ்பின் மேரிதாசன் | கவரப்பேட்டை |
| 11.பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| 12.அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| 13.கலா சகாயம் | கவரப்பேட்டை |
| 14.பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| 15.கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| 16.அன்னபுஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| 17.சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| 18.ஜோஸ்பின் அபிசியா | கவரப்பேட்டை |
| 19.அனுஷா அகஸ்டின் | கவரப்பேட்டை |
| 20.ஸ்டெல்லா பீட்டர் | மாதர்பாக்கம் |
| 21.ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| 22.லூர்துமேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| 23.பினோஸ் பிரின்ஸ் | தூத்துக்குடி |

## அடுத்த இதழ்


மாதாவின் விண்ணேற்ப பெருவிழா மற்றும் சுதந்திர தினவிழா சிறப்பிதழாக வரவிருக்கிறது. எனவே அதைப்பற்றிய சிறப்புக் கட்டுரைகள் கதைகள் துணுக்குச் செய்திகள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகள் எங்களை வந்து...

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-07-2014**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !

# வாழ்வு தரும் வார்த்தைகள் – ஜூலை 2014

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | புனித கால் | ஆமோ 3:1-8, 4:11-12 | மத். 8:23-27 |
| 2. | புனித பெர். ரியலினோ | ஆமோ 5:14-15,21-24 | மத். 8:28-34 |
| 3. | திருத்தூதர் தோமா | எபே. 2:19-22 | யோவா.20:24-29 |
| 4. | புனித எலிசபெத் | ஆமோ.8:4-6,9-12 | மத்.9:9-13 |
| 5. | | ஆமோ. 9:11-15 | மத். 9: 14-17 |
| 6. | ஆண்டின் ஞாயிறு14 | செக்.9:9-10 | |
| | | உரோ.8:9,11-13 | மத்.11:25-30 |
| 7. | | ஓசே. 2:16-18,21-22 | மத். 9:18-25 |
| 8. | புனித அக்விலா பிரின்சிலா | ஓசே. 8:4-7, 11-13 | மத். 9:32-38 |
| 9. | | ஓசே.10:1-3,7:8-12 | மத். 10:1-7 |
| 10. | | ஓசே.11:1-4,8-9 | மத். 10:7-15 |
| 11. | புனித பெனடிக்ட் | ஓசே. 14:2-10 | மத். 10:16-23 |
| 12. | புனித ஜாண் கல்பர்ட் | ஏசா.6:1-6 | மத். 10:24-33 |
| 13. | ஆண்டின் ஞாயிறு15 | எசா.55:10-11 | |
| | | உரோ.8:18-23 | மத். 13:1-23 |
| 14. | | எசா 1:10-17 | மத்.10:34,11:1 |
| 15. | புனித பொனவந்தூர் | எசா.7:1-9 | மத். 11:20-24 |
| 16. | புனித கார்மெல் அன்னை | எசா. 10:5-7,13-18 | மத்.11:25-27 |
| 17. | | எசா.26:7-9,12,16-19 | மத். 11:28-30 |
| 18. | புனித பெடரிக் | எசா.38:1-6,21-22,7-8 | மத்.12:1-8 |
| 19. | புனித மக்ரீனா | மீகா. 2:1-5 | மத். 12:14-21 |
| 20. | ஆண்டின் ஞாயிறு 16 | சா.ஞா.12:13,18-19 | |
| | | உரோ.8:26-27 | மத். 13:24-43 |
| 21. | | மீகா.6:1-4, 6-8 | மத். 12:38-42 |
| 22. | புனித மேரி மகதலேன் | மீகா.7:1415,18-20 | யோவா.20:1-2,11-18 |
| 23. | புனித பிரிஜித்தம்மாள் | எரே.1:1,4-10 | மத். 13:1-9 |
| 24. | | எரே.2:1-3,7,8,12-13 | மத்.13:10-17 |
| 25. | புனித யாக்கோபு | 2 கொரி.4:7-15 | மத். 20:20-28 |
| 26. | புனித சுவக்கீன் அன்னம்மாள் | எரே.7:1-11 | மத்.13:24-30 |
| 27. | ஆண்டின் ஞாயிறு 17 | 1அர. 3:5,7-12 | |
| | | உரோ.8:28-30 | மத். 13:44-52 |
| 28. | | எரே.13:1-11 | மத். 13:31-35 |
| 29. | புனித மார்த்தா | எரே. 14:17-22 | யோவா.11:19-27 |
| 30. | புனித பீட்டர் கிறிஸ்லாகு | எரே.15:10,16-21 | மத். 13:44-46 |
| 31. | புனித லெயோலா இஞ்ஞாசி | எரே.18:1-6 | மத். 13:47-53 |



# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

பதில்கள் தேடவேண்டிய பகுதி : தொடக்கநூல் அதிகாரம் 1 முதல் 5 வரை

1. இறைவன் உலகத்தை எத்தனை நாளில் படைத்தார்?
2. சூரியன் முதலில் தோன்றியதா? ஒளி முதலில் தோன்றியதா?
3. ஒரு நாளில் முதலில் வருவது காலையா? மாலையா?
4. கடவுள் மனிதனுக்கு முதலில் தந்த உணவு எது...தாவரமா? மாமிசமா?
5. மழை பெய்யாமலேயே நிலம் எவ்வாறு நனைந்தது?
6. காட்டுவிலங்குகளுக்கும், வானத்துப் பறவைகளுக்கும் பெயரிட்டது யார்?
7. நன்மை–தீமை அறியும் கனியை முதலில் உண்டது யார்?
8. மனிதன் முதன் முதலில் உடுத்திய ஆடை எது?
9. எந்த மரத்தின் கனியை உண்டால் என்றென்றும் வாழலாம்?
10. எதை அடக்கி ஆள வேண்டும்?
11. காயின் குடியேறிய நாடு எது?
12. கானான் வம்சத்தில் பிறந்த முதல் பெண் யார்?
13. இலாமேக்கிற்காக எத்தனை முறை பழிவாங்கப்படும்?
14. ஆதாம்–ஏவாளுக்கு பெண் பிள்ளைகள் உண்டா?
15. தான் நிறுவிய நகரத்துக்கு தன் மகனின் பெயரிட்டது யார்?
16. யார் பிறந்த காலத்தில் கடவுளுக்கு ஆண்டவர் என்னும் பெயர் வழங்கப்பட்டது?
17. ஆதாமின் சாயலிலும், உருவிலும் பிறந்தவன் யார்?
18. கடவுளால் எடுத்துக்கொள்ளப்பட்ட மனிதன் யார்?
19. ஆதாமின் வழித்தோன்றல்களில் இருவருக்கு ஒரே பெயர் சூட்டப்பட்டது அந்தப் பெயர் என்ன?
20. நோவா – இதன் பொருள் யாது?

-P.ஆல்வின் அண்ணாமலை.

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.07.2014**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். தேவைக்கேற்ப மாலை 4.00மணிக்கும், 6.30 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.
- முதல் சனி தவிர்த்து மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

### இணையூர் வழிபாடுகள்.

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |


solomon Graphics, Tsy. 9788675143